# பொதுமக்களின் சிந்தனைக்கு!

அன்புள்ள பொதுமக்களே! அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்)!

இதுவரை பல்சமய மக்களிடையே நிகழ்த்திய நம் உரையையும், இதுவரை நாம் வெளியிட்ட வெளியீடு களையும் பொறுமையாகச் சிந்தனையோடு படித்ததற்கு நாங்கள் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

ஊரெல்லாம், நாடெல்லாம், பள்ளி மேடைகளி லெல் லாம், ஏன்? இஸ்லாமிய மேடைகள் அனைத்திலும், எங்களைப்பற்றி அவிழ்த்துவிடப் பட்டிருக்கக்கூடிய அவ தூறுகள் நியாயம் தானா? உண்மை தானா? என்பதை இப்போது சிந்தியுங்கள்.

1. நபி(ஸல்) அவர்களைச் சாதாரண மனிதர் என்று நாங்கள் சொல்வதாகக் குற்றச்சாட்டு!
2. நபித்தோழர்களை அவமரியாதை செய்வதாகக் குற்றச் சாட்டு?
3. இமாம்களையும், இமாம்களின் சேவைகளையும் குறைத்துச் சொல்வதாகக் குற்றச்சாட்டு!
4. வலிமார்களையும், நல்லடியார்களையும், ஏசுவதாகக் குற்றச்சாட்டு!
5. குர்ஆனையும், ஹதீஸ்களையும் எங்கள் மனம் போன போக்கில் சொல்லிப் பாமர மக்களைக் குழப்புவதாகக் குற்றச்சாட்டு!

இத்தனைக் குற்றச்சாட்டுக்களையும் எங்கள்மீது சுமத்துகிறவர்கள் யார்? மௌலவீ பட்டம் பெற்ற, நாங்களே இஸ்லாத்தின் பாதுகாவலர்கள்; மற்றவர்களுக்கு இஸ்லாத்தை மக்களுக்கு எடுத்துச் சொல்லும் உரிமை இல்லை என்று சொல்லும் புரோகிதத்தைத் தொழிலாகக் கொண்டவர்கள். நபி(ஸல்) அவர்கள் காலத்தில் தாருந் நத்வாவைச் சேர்ந்தவர்களும் இப்படித்தான் உரிமை கொண்டாடினார்கள் என்பது வரலாறு சொல்லும் உண்மை.

பச்சைப் பொய்களைத் திரும்பத் திரும்ப மக்களிடம் எடுத்துச் சொல்லி, அவற்றை உண்மைப்படுத்துவதன் வாயிலாகத் தங்களது புரோகிதத் தொழிலைத் தக்க வைத்துக் கொள்ளலாம் என்று மனப்பால் குடிக்கின்றனர். பொதுமக்கள் விழித்துக் கொண்டார்கள். இனி மேலும் அவர்கள் கட்டுக் கதைகளைச் சொல்லி, அவர்களை ஏமாற்ற முடியாது என்பதைப் பொதுமக்களாகிய நீங்களே அந்தப் புரோகித இனத்திற்கு உணர்த்த வேண்டும்.

எங்கள் மீது சுமத்தும் குற்றச்சாட்டுகளில் ஒன்றை யாவது எங்களின் பிரசுரங்களிலிருந்தோ, அந்நஜாத் மாத வெளியீட்டிலிருந்தோ, புள்ளி விளக்கத்துடன் மெய்ப்பித் துக் காட்டுங்கள் என்று அவர்களிடம் கூறுங்கள். அவர்கள் படும்பாட்டை நீங்களே நேரில் பாருங்கள்; காலங் காலமாகப் பொதுமக்களின் மார்க்க அறியாமை யைப் பயன்படுத்தி, எந்த அளவு மோசடி செய்து, மக்களை நரகில் தள்ளி இருக்கிறார்கள் என்பதை நீங்களே நன்கு சிந்தித்து விளங்கிக் கொள்ளுங்கள்.

மௌலவீகளாகிய அவர்களிடம் கேட்க வேண்டிய கேள்விகளைப் பொதுமக்களிடம் கேட்டு அப்பாவிப் பொதுமக்களைக் குழப்புவதாக, ஒரு குற்றச்சாட்டும் எங்கள்மீது உண்டு.

அதுவும் எந்த அளவு பச்சைப் பொய் என்பதற்குத், தொடக்கத்திலிருந்து அவர்களுக்கு நாம் எழுதிய கடிதங்களைப் பொதுமக்களாகிய உங்கள் முன் வைக்கி றோம். கடிதங்களுக்கு முறையாக அவர்கள் பதில் எழுதியதே இல்லை. ஒரே ஒரு மௌலவீ சாஹிப் எழுதிய ஒரே ஒரு கடிதத்தையும் உங்கள் பார்வைக்கு வைத்து விட்டோம். 1987-ல் திருச்சியில் நடைபெற்ற அவர்களின் மாநாட்டில் நம் கடிதங்களில் சிற் சில பகுதிகளை மட் டும் பொது மக்களுக்குப் படித்துக்காட்டி, அவர்களைத் திசை திருப்ப முயன்றிருக்கிறார்கள். ஆக அடுத்து வரும் பக்கங்களில், அக்கடிதங்களை அப்படியே தந்திருக்கிறோம்.

அவற்றை நடுநிலையுடனும், பொறுமை யுடனும் சிந்தனை யுடனும் படித்து உண்மையைச் சொல்லக் கூடியவர்கள் யார்? மக்களை நேர்வழியின் பால் அழைப்பவர்கள் யார்? மக்களை வழிகேட்டில் இழுத்துச் செல்லக் கூடியவர்கள் யார்? தங்களின் புரோகிதத் தொழிலைத் தக்க வைத்துக் கொள்ளக் குர்ஆனையும், ஹதீஸ்களையும் புரட்டுவது யார்? என்ற ஐயங்களுக்குப் பொதுமக்களே நன்கு சிந்தித்து நல்லதொரு முடிவுக்கு வருமாறு உங்களை அன்புடன் அழைக்கிறோம்.